முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1462

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.09.2023**, சனிக்கிழமை

1. ஞானகுருவே அரங்கா வாழ்க
   ஞானிகள் பலம்கொண்ட தேசிகா வாழ்க
   வானவர்கள் மெச்சுகின்ற வள்ளலே வாழ்க
   வரம்தந்து உலகை மீட்கும் குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 13ம் நாள், 30.09.2023, சனிக்கிழமை)
   ஊழ்போக்கி இந்த உலகத்தை மீட்கும் உயர்சக்தியாய் உள்ள அரங்கனே
   உன்வழி உலகோர் வரவர வையகத்தில் மாற்றம் நடக்கும்
3. நடக்கவே அரங்கன் அகத்தியர் சன்மார்க்க சங்க கிளை
   நாடெங்கிலும் பெருகி இனிதே
   அரங்கனின் தருமம் தடையற வளர
   அகத்தியர் சன்மார்க்க சங்க கொள்கைகள் எங்கும் நிரம்ப
4. நிரம்பவே கலியின் துன்பங்கள் அகன்றோடி
   நிலவுலகில் ஞானயுக மாற்றமாக
   அழியாமை பெற்ற மக்கள் கூட்டமாக
   அகிலமெங்கும் ஞானியர்கள் நிரம்பும்வண்ணம்
5. வண்ணமுடன் அற்புதம் நடந்து
   வையகத்தில் ஞானஆட்சி உதயமாகும்
   பெருமைகொண்டு அரங்கன் திருவடிபற்றி
   பேருலகோர் ஞானம் பயின்றுவர வருங்காலம் அரங்கன் அவதார
   நோக்கமாக வெற்றியாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–